# போர்ட் ஸெயின்ட் ஜார்ஜ் கெஜெட்

**I-வது பாகத்தின் ஸப்ளிமெண்ட்.**

**SUPPLEMENT TO PART I OF THE FORT ST. GEORGE GAZETTE,**

JANUARY 31, 1922.

நெ. 5.] மதராஸ் : செவ்வாய்க்கிழமை மாலை, 1922-ம௵ ஜனவரி௴ 31௳. [விலை, 3 பை.


## கவர்ன்மென்ட் விளம்பரங்களின் தமிழ்மொழிபெயர்ப்பு.

## Tamil Translations of Notifications by Government.

---

### லா டிபார்ட்மென்ட்.

(ஜெனரல்.)

---

### விளம்பரம்.

போர்ட் ஸெயின்ட் ஜார்ஜ், 1922-ம௵ ஜனவரி௴ 5௳.

நெ. 22.—1911-ம௵த்திய சென்னபட்டணத்து கொடைக்கூலிவண்டி ஆக்டின் 1-வது பிரிவைச்சேர்ந்த (2) குறிப்பிட்ட உட்பிரிவிற்கண்ட (b) அடையாளமிட்ட பகுதியிலுள்ள விலக்கு நிபந்தனையின்படி, அந்த ஆக்டிற்கண்ட நிபந்தனைகளை வட ஆற்காடு ஜில்லாவிலுள்ள திருப்பத்தூர், வாணியம்பாடி மியுனிஸிபாலிடிகளுக்கு 1922-ம௵ ஏப்ரல்௴ 1௳ யன்றைக்காவது அதற்குப் பிறகாவது வியாபிக்கச்செய்ய உத்தேசித்திருப்பதாயும், வட ஆற்காடு ஜில்லா டிஸ்ட்ரிக்ட் பொலீஸ் ஸூபரின்டெண்டென்டை அந்த ஆக்டின்படி கம்மிஷனருக்குரிய அலுவல்களைச் செய்யும்படி நியமிக்க உத்தேசித்திருப்பதாயும் இதனால் அறிக்கைசெய்யப்படுகிறது. ஷை ஆக்டை மேலே உத்தேசித்திருக்கிறபடி வியாபிக்கச் செய்வதற்கு ஆட்சேபனையுள்ளவர்களாயிருக்கும் நபர்கள் இந்த விளம்பரம் பிரசுரிக்கப்பட்டதுமுதல் இரண்டு மாத காலத்துக்குள் வட ஆற்காடு டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டுக்கு முன்பாகத் தங்களுடைய ஆட்சேபனைகளைத் தெரிவித்துக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளவாகிறது.

ஆர். ராமசந்த்ர ராவ்,
கவர்ன்மென்ட் ஸெக்ரெடரி.

(A true translation)

C. N. SARAVANA MUDALIYAR,
*Tamil Translator to Government*

---


MADRAS: PRINTED AND PUBLISHED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.